உ

சிவமயம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# நோர்வே அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயம்

Norges Hindu Kultur Senter, Siva Subramaniyar Alayam, Post box 85 Grorud, Martinstrandlis vei 10, 0956 OSLO, NORWAY

http://www.nhks.com Tele Phone : + 47 22 25 13 01 e - mail : post@hindutemple.no; norgeshindu@gmail.com



## தமிழ் சித்திரை புதுவருடப்பிறப்பை முன்னிட்டு

**அரசாங்கத்தின் பாதுகாப்பு நடைமுறைகள் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கும் காலம் இது. இவ்வாறான சூழ்நிலையில் எங்களது இல்லங்களில் இருந்தவாறே, குடும்ப உறவுகளுடன் அமைதியாக வருடப்பிறப்பைக் கொண்டாடுவதே சாலச்சிறந்தது.**

## 13.04.2020 திங்கட்க்கிழமை பிற்பகல் 3 மணி 56 நிமிடம் சார்வரி வருட சிறப்புப்பூசை

மங்களகரமான தமிழ்சித்திரை திங்கள் 1ம் நாள் 13.04.2020 திங்கட்க்கிழமை பிற்பகல் 3.56 மணிக்கு அபரபக்க ஷஸ்டி திதியில் மூலநட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில், துலாம்-லக்கினத்தில், நட்சத்திர பட்ச்சியாகிய கோழி துயில் தொழிலும் செய்யுங்காலத்தில் இப்புதிய **சார்வரி** வருடம் பிறக்கின்றது. அன்று முற்பகல் 11:56 மணிமுதல் மாலை 7.56 மணிவரை விஷுபுண்ணியகாலமாகும்.

இப்புண்ணியகாலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்ப்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் இலவமிலையும், காலில் விளாவிலையும் வைத்து ஸ்நானம்செய்து, வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் அல்லது வெள்ளை கரையமைந்த பட்டாடையாயினும் தரித்து, முத்து, மாணிக்கம் இழைத்த ஆபரணம் அணிந்து வழிபடுதல் நன்று.

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

அஸ்வினி, கார்த்திகை 2,3,4, ரோகினி, மிருகசீரிடம், மகம், பூராடம், உத்தராடம் 1ம் கால், ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம்செய்து இயன்ற தான, தர்ம வழிபாடுகளை விஷேடமாக செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யவும்.

**கைவிசேஷம்:** **13.04.2020 திங்கட்க்கிழமை பிற்பகல் 3:56 மணிமுதல் மாலை 7:00 மணிவரை**

**அபிஷேகம் பூஜை** -

பிற்பகல் 2 மணிக்கு விஷேட அபிஷேகமும், தொடர்ந்து 3:56 மணிக்கு சார்வரிவருடம் பிறக்கும் நேரத்தில் விசேட பூசையும், தீபாராதனையும் இடம்பெறும். வருடப்பிறப்பு பூசையைத் தொடர்ந்து அர்ச்சனை செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. உபயம்: திரு, திருமதி – தனபாலசிங்கம்

vipps **இல.– 528603** மூலம் பணத்தை செலுத்தி அர்ச்சனை செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்திருக்கின்றோம். பெயர் நட்சத்திரம் அனுப்ப வேண்டிய தொ.பே.இல. 90747845

**மருத்துநீர்**: 12.04.2020 ஞாயிறு பிற்பகல் 2:00மணி முதல் மாலை 5 மணி வரை ஆலயத்தின் வெளிவீதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொருவராக வந்து வரிசையாக 6அடி இடைவெளிவிட்டு நின்று பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு : ~*விஷேட அபிஷேக நாட்களின்போது பால், தயிர், இளநீர், பூக்கள் போன்றவற்றை வழங்க விரும்பும் அடியார்கள் அபிஷேக நேரத்திற்கு முன்னதாகவே கொடுத்துதவுமாறு வேண்டுகின்றோம்.*

ஆலய பிரதமகுரு: சிவஸ்ரீ யோகீச.சுபாஸ்கரக் குருக்கள் , ஆலயகுரு: சுதன் குருக்கள்

மேலதிக தொடர்புகட்கு : ஆலயம் : 22251301

கலைச்செயலாளர் : 92817671 உப கலைச்செயலாளர் : 47067084

09/04/2020 22:28:31